## முதலாம் உயிர்த்தெழுதலும் இரண்டாம் மரணமும்

**வெளி-20: 4-5** *இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து... மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.*

**வெளி-2: 11** *ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.*

### முதலாம் உயிர்த்தெழுதல்:

முதலாவது உயிர்த்தெழுந்தவர் **இயேசு,** அடுத்து எழவிருப்பவர்கள் **இரண்டு சாட்சிகள்**.(வெளி-11: 7, 11-12) பிறகு **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்**

**1கொரி-15: 20, 23** *கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.*

**1தெச-4: 16** *கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.*

**1கொரி-15: 52** *எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.*

### முதலாம் உயிர்த்தெழுதலின் சிறப்பு:

இயேசுவுக்கு முன்னும் பின்னும் பலர் உயிர்த்ததைக் குறித்தும் உயிரோடு எழுப்பப்பட்டதைக் குறித்தும் வேதத்திலும், பல சாட்சிகள் மூலமாகவும் நாம் அறிகிறோம். உதாரணத்திற்கு:

1ராஜா-17: 20, 22 எலியாவினால் உயிரோடு எழுப்பப்பட்ட மகன்

2ராஜா-4: 20, 32, 35 எலிசாவினால் உயிரோடு எழுப்பப்பட்ட மகன்

2ராஜா-13: 21 எலிசாவின் எலும்புகளில் பட்டதால் உயிரடைந்த வீரன்

**புதிய ஏற்பாட்டில்:**

1. மரித்த லாசரு உயிரோடு எழுப்பப்பட்டது
2. விதவையின் மகன் உயிரோடு எழுப்பப்பட்டது
3. இயேசுவின் உயிர்த்தெழுதலின்போது பலர் எழுந்தது
4. சிறுமி உயிரோடு எழுப்பட்டது

இப்படி உயிர்த்தெழுந்தவர்கள் மறுபடியும் மரித்தார்கள். ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலின் சிறப்பு என்னவென்றால், இது:

1. மறுபடியும் மரிக்காத உயிர்த்தெழுதல் (ரோம-6: 9)
2. மறுபடியும் வருவதற்கான உயிர்த்தெழுதல் (அப்-2: 11)
3. ஆளுகை செய்வதற்குரிய உயிர்த்தெழுதல்

### இரண்டாம் மரணம்

**வெளி- 20: 14** *அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.*

**1. முதலாவது அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படுவது**

அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசி (வெளி-19: 20)

**2. இரண்டாவது தள்ளப்படுவது:** சாத்தான் (வெளி-20: 10)

**3. மூன்றாவது:** (வெளி-20: 15) ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படாதவர்கள்

**வெளி-21: 8** *பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.*

**வெளி-20: 6** *முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை, இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.*

### இரண்டிற்கும் உள்ள வேற்றுமைகள்

**ஆதி-2: 9** *தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்..* **நன்மை:** உயிர்த்தெழுதல் - **தீமை:** மரணம்

*ஆசீர்வாதமானது - ஆபத்தானது*

*ஆளுகைசெய்வது - அடிமையாக இருப்பது*

*சந்தோஷமானது - சஞ்சலமானது*